**<u>IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF, ATTUR</u>**

**O.S. No.169/2002**

Deposition of **<u>D.W.-2</u>** witnesses for Plaintiff/Defendant Solemnly affirmed by Tmt. K. Janaki, Gr. III Bench clerk of this court, on 03.04.2025 in accordance with the provisions of Act 1 of 1873.

Name : அழகுவேல் Father's Name : துரைசாமி உடையார்

துவக்க நேரம் : 12.10 P.M.

சாட்சி முன்னிலையானார் உறுதிமொழி செய்து வைக்கப்பட்டார்.

<u>வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> :

1) கடந்த 04.12.1932 பி.வா.த.சா.ஆ.15 மற்றும் கடந்த 23.02.1948 வா.த.சா.ஆ 9 ஆகிய இரண்டு கிரைய பத்திரங்களில் கண்டுள்ள சொத்து அளவை தவிர வேறு சொத்து எங்களுக்கு இல்லை என்றால் சரிதான். சாட்சி மீண்டும் பூர்வீக சொத்தும் இருந்தது என்று சாட்சியம் அளிக்கிறார்.

2) பூர்வீக சொத்துக்களுக்குண்டான எங்களிடம் எந்தவிதமான ஆவணம் இல்லை என்றால் சரிதான். மேற்சொன்ன பி.வா.த.ஆ.15, வா.சா.ஆ 9 ஆகிய 2 ஆவணங்களில் உள்ள சொத்து விவரத்தில் உள்ள செக்குபந்தி சரியா என்றால் சரிதான். மேற்படி 2 ஆவணங்களுக்கு முரணாகவும், தவறுதலாகவும் கடந்த 1999-ம் ஆண்டு நானும், எனது தகப்பனாரும் பிரதிவாதி சித்ராவிற்கு கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

3) நாங்கள் பிரதிவாதி சித்ராவிற்கு எழுதிகொடுத்த பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவர அளவின்படி நாங்கள் எக்காலத்திலும் அந்த சொத்துக்களை அனுபவித்ததில்லை என்றால் சரியல்ல.

Typed by Selvi. C. Sasikala - O.S. No. 169/2002, Dt. 03.04.2025.

4) நாங்கள் பிரதிவாதி சித்ராவிற்கு கிரையம் செய்த கொடுத்தபொழுது ஒப்படைத்த நத்தம் பட்டாவில் (பி.வா.த.சா.ஆ.14) கண்டுள்ள சொத்து அளவு தவறானது என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் நத்தம் பட்டாவில் உள்ள சொத்தின் வடபுறத்தில் ராஜவீதி அமைந்துள்ளது என்றால் சரிதான். நாங்கள் பிரதிவாதி சித்ராவிற்கு விற்ற சொத்து, நத்தம் பட்டா ச.எண்.267/4 -ல் உள்ளது என்றால் சரிதான்.

5) நத்தம் பட்டாவில் ச.எண்.267/4-ன் வடபுறம் காலியிடம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் பட்டாவில் அப்படிதான் உள்ளது. ஒரு பொய்யான பட்டாவை தவறான அளவுகளோடு, தவறான சங்கதிகளை கொண்டு எனது அப்பா பெயரில் நத்தம் பட்டா (பி.வா.த.சா.ஆ.14) பெற்றுள்ளோம் என்றால் சரியல்ல, எனது அப்பா பெயருக்கு பட்டா சரியாகதான் வழங்கியுள்ளது. பட்டாவில் உள்ள அளவு விஸ்தீரணம் தவறானது என்றாலும் தவறான அளவுகளின் அடிப்படையில் கதிர்வேல் உடையாருக்கு பாத்தியப்பட்ட ஒரு பகுதியையும் சொத்து சேர்த்து நாங்கள் சித்ராவிற்கு தவறாக கிரையம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரியல்ல.

6) கடந்த 23.08.1999-ல் நாங்கள் 1-ம் பிரதிவாதி சித்ராவிற்கு கிரையம் செய்த கொடுத்தபொழுது தென்வடல், கிழமேல் எந்த அளவில் கிரையம் செய்து கொடுத்தோம் என்றால் கிழமேல் வடபுறம் 27 அடியும், கிழமேல் தென்புறம் 23-1/2 அடியும், தென்வடல் கிழக்கு, மேற்கு பகுதியில் தலா 36 அடியும் கிரையம் செய்து கொடுத்தோம். நான் மேற்சொன்ன அளவுகளில் சித்ராவிற்கு கிரையம் கொடுக்க எனக்கும், எனது தகப்பனாருக்கும் எந்தவித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. மேற்படி நான் சொன்ன அளவுகளில் எங்களுக்கு எந்தவித அனுபவமும், உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

7) கடந்த 23.08.1999-பத்திரத்தின் அடிப்படையில் நாங்கள் மேற்சொன்ன அளவிற்கு அனுபவத்தை ஒப்படைக்கவில்லை என்றாலும் 1-ம் பிரதிவாதி சித்ராவும் மேற்சொன்ன அளவில் அனுபவத்தை சுவாதீனத்திற்கு எடுத்துக்கொள்ளவில்லை என்றாலும் அதனடிப்படையில் அனுபவத்திற்கு வரவில்லை என்றாலும் சரியல்ல.

தற்பொழுது சித்ராவின் வீட்டை நான் பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். அந்த வீட்டின் அளவு செவ்வகமாக அமைப்பு உள்ளது என்றால் இல்லை, பட்டாவில் கண்டுள்ளபடி உள்ளது. அதேபோல் நான் எழுதிக்கொடுத்த கிரையப்பத்திரத்தின் அடிப்படையில்தான் சித்ரா வீடு கட்டியுள்ளாரா என்றால் ஆமாம். கிரையப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்து விவரத்தின் அடிப்படையில் வீடு கட்டியுள்ளாரா என்றால் சரிதான்.

8) பட்டா மற்றும் பத்திரத்தில் கண்டுள்ளபடி கட்டிடம் தென்புறத்தின் எந்த பகுதியில் கட்டிடம் குறைவாக காணப்படுகிறது என்றால் தென்புறத்தின் மேற்கு திசையில் குறுகி காணப்படுகிறது. அளந்து பார்த்தோமா என்றால் நான் அளந்து பார்க்கவில்லை. என்னிடம் காட்டப்படும் நத்தம் பட்டாவில் (பி.வா.த.ஆ-14)உள்ள வரைபடத்தின்படி கிழக்கில் குறைவாக உள்ளதா, மேற்கில் குறைவாக உள்ளதா என்றால் குறிப்பிட்டு சொல்ல முடியாது.

9) நான் 1-ம் பிரதிவாதி சித்ராவின் வீட்டை பார்த்து எவ்வளவு நாளாகும் என்றால் சுமார் 1 வருடம் இருக்கும். நீதிமன்ற ஆணையர் வந்து வழக்கு சொத்தை அளவீடு செய்த விவரம் தெரியுமா என்றால் தெரியாது, நான் இல்லை. அதை கேட்டும் நான் தெரிந்துகொள்ளவில்லை. 1-ம் பிரதிவாதி சித்ரா வீட்டை வடபுறமும், தென்புறமும் கிழமேலாக ஒரே அளவில் சரியான செவ்வக வடிவில் வீட்டை கட்டியுள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது.

10) வாதி இந்த வழக்கை தாக்கல் செய்யும் சமயத்தில் 1-ம் பிரதிவாதி சித்ரா, சித்ராவின் மூலப்பத்திரத்தில் கண்டுள்ள சொத்துக்களுக்கு மேற்கில் உள்ள வாதிக்கு பாத்தியப்பட்ட சொத்தில் கிழமேல் 14 1-2 அடியும், தென்வடல் 36 அடியும், ஆக்கிரமிப்பு செய்து புதியதாக வீடு கட்டியுள்ளார் என்றாலும் இந்த வழக்கில் வேறு யாரும் பொய் சாட்சி சொல்லமாட்டார் என்று கருதி என்னை இந்த வழக்கில் பொய் சாட்சி சொல்ல பிரதிவாதி சித்ரா அழைத்து வந்தார் என்றால் சரியல்ல. 1-ம் பிரதிவாதி சித்ரா அழைத்ததன்பேரில்தான் நான் சாட்சி சொல்ல வந்துள்ளேன் என்றால் சரிதான். நான்தான் சொத்தை விற்றேன். அதனால்தான் சாட்சி சொல்ல வந்துள்ளேன்.

முடிவு நேரம்:  12.53 P.M.

Taken down before / by me in open court and read over / interpreted to the witness and acknowledged by him / to be correct

sd/-S.Munusamy
Principal District Munsif, Attur.

Typed by Selvi. C. Sasikala - O.S. No. 169/2002, Dt. 03.04.2025.